# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, ஓகத்து மாதம் 02 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 36.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்**

[2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 72/2021

**(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 5 ஆம் பிரிவு, "தீர்வை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 101 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

""இலத்திரனியல்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தினால் அதற்கென குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(அ) வழக்காளியான ஒரு திறத்தவர் அல்லது எதிராளியான ஒரு திறத்தவர் வதிகின்றாரோ; அல்லது".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்-

(அ) பந்தி (ஆ) இல், “கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “கொண்டிருத்தல் வேண்டும்;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலமும்:-

“(இ) ஏதேனும் மன்றாணை, அறிவித்தல் அல்லது வேறு எவையேனும் சட்ட ஆவணங்கள் என்பன ஒரு பதிவு செய்யப்பட்ட அற்றோணிக்குச் சேர்ப்பிக்கப்படக்கூடிய ஒரு இலத்திரனியல் அஞ்சல் முகவரியையும் மற்றும் செல்லிடத் தொலைபேசி இலக்கமொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும்;

(ஈ) அத்தகைய திறத்தவரின் முகவரி, செல்லிடத் தொலைபேசி இலக்கம் மற்றும் இலத்திரனியல் அஞ்சல் முகவரி ஏதேனுமிருப்பின் அதனை எடுத்துக்கூறுகின்றதும் பொருளளவில் முதலாம் அட்டவணையின் 16அ என்னும் இலக்கத்தைக்கொண்ட படிவத்திலானதுமான குறிப்பறிக்கையொன்றை இருபிரதிகளில் கொண்டிருத்தல் வேண்டும்; அவை அத்தகைய திறத்தவரின் முறையே பதிவுசெய்யப்பட்ட முகவரியாகவும் பதிவுசெய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கமாகவும் பதிவுசெய்யப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் முகவரியாகவும் கருதப்படுதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட அற்றோணி அத்தகைய குறிப்பறிக்கையுடன் சேர்த்து பதிவஞ்சல் மூலம் அத்தகைய அறிவித்தல்களை அல்லது வேறு சட்ட ஆவணத்தை சேர்ப்பிப்பதற்கான

ஆகுசெலவை மேவுவதற்குத் தேவைப் பட்ட பெறுமதியைக்கொண்ட முத்திரைகளைப் பதிவாளருக்கு அளித்தல் வேண்டுமென்பதுடன் பதிவுசெய்யப்பட்ட அற்றோணி, விரைதூதர் சேவையின் அல்லது இலத்திரனியல் வழிவகைகளினூடான சேவையின் ஆகுசெலவைப் பொறுத்தலும் வேண்டும்.”.

(2) உட்பிரிவு (2) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

“(2அ) (அ) திறத்தவரொருவர் பதிவுசெய்யப்பட்ட அற்றோணியொருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றவிடத்து அத்தகைய அற்றோணி, நியமனத்தில், விடயத்துக்கேற்ப, திறத்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை, கடவுச்சீட்டு இலக்கத்தை அல்லது வேறேதேனும் அடையாளப்படுத்துகை முறையினை குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய திறத்தவரின் அடையாளத்தைச் சான்றுப்படுத்தி அதன்மேல் புறக்குறிப்பொன்றைச் செய்தலும் வேண்டும். திறத்தவர், கம்பெனியொன்றாக அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக உள்ளவிடத்து நியமனமானது விடயத்துக்கேற்ப, அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையின்கீழ் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழான நியமனத்தில் கையொப்பமிடுவதற்கு அவரது பதிவுசெய்யப்பட்ட அற்றோணியைச் சந்திக்க இயலாதவராக இருக்கும்பட்சத்தில், அத்தகைய நியமனமானது அத்தகைய ஆளின் அடையாளத்தைச் சான்றுப்படுத்தவேண்டிய பின்வரும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுள் எவரினதும் முன்னிலையில் கையொப்பமிடப்படுதல் வேண்டும்:-

(i) அத்தகைய திறத்தவர் வதிகின்ற நாட்டின் ஒரு சட்டத்தரணி, ஒரு மன்றாடியார், ஒரு வழக்கறிஞர் அல்லது ஒரு நொத்தாரிசு; அல்லது

(ii) அத்தகைய திறத்தவர் வதிகின்ற நாட்டிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின், தூதரகத்தின் அல்லது காவற்றூது அலுவலகத்தின் உயர்ஸ்தானிகர், தூதுவர், ஓர் இராசதந்திர அலுவலர் அல்லது ஒரு காவற்றூது அலுவலர்.

(இ) குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் நியமனத்தின் மூலப்பிரதியைக் காண்பிப்பதற்கான ஏதேனும் தாமதம் அல்லது சிரமத்தின் விடயத்தில், நீதிமன்றம் பணிக்கக் கூடியவாறான நியாயமானதொரு காலத்தினுள் அத்தகைய நியமனத்தின் மூலப்பிரதியைக் காண்பிப்பதற்கமைய, இலத்திரனியல் வடிவத்திலான மூலப் பிரதியினது பிரதியானது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) (அ) பதிவுசெய்யப்பட்ட ஓர் அற்றோணிமூலம் தோன்றாத வழக்கொன்றுக்கான திறத்தவர் ஒவ்வொருவரும், அழைப்புக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர், வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படாலொழிய, இக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய திறத்தவருக்கு சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல்களை அல்லது வேறு ஏதேனும் சட்ட ஆவணத்தைச் சேர்ப்பிப்பதற்காக அத்தகைய திறத்தவரின் முறையே பதிவு செய்யப்பட்ட முகவரியாகவும், பதிவு செய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கமாகவும் மற்றும் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியாகவும் கருதப்படவேண்டிய முகவரி, செல்லிடத் தொலைபேசி இலக்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் முகவரி, ஏதேனுமிருப்பின், அதனை எடுத்துக்கூறுகின்றதும் இரு பிரதிகளிலானதும் பொருளளவில் முதலாம் அட்டவணையின் 16அ என்னும் இலக்கத்தைக் கொண்ட படிவத்திலானதுமான குறிப்பறிக்கையொன்றை பதிவாளருக்கு

ஒப்படைத்தல் வேண்டும். திறத்தவர் ஒவ்வொருவரும் முகவரி, செல்லிடத் தொலைபேசி இலக்கம் அல்லது இலத்திரனியல் அஞ்சல் முகவரியிலான ஏதேனும் மாற்றம் பற்றி உடனடியாக பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) திறத்தவர் ஒவ்வொருவரும் அத்தகைய குறிப்பறிக்கையுடன் சேர்த்து பதிவஞ்சல்மூலம் அத்தகைய அறிவித்தல்களை அல்லது சட்ட ஆவணத்தைச் சேர்ப்பிப்பதற்கான ஆகுசெலவை மேவுவதற்குத் தேவைப்பட்ட பெறுமதியைக் கொண்ட முத்திரைகளைப் பதிவாளருக்கு அளித்தல் வேண்டும். விரைதூதர் சேவையின் அல்லது இலத்திரனியல் வழிவகைகளினூடான சேவையின் ஆகுசெலவை அவர் பொறுத்தல் வேண்டும்.

(3) திறத்தவரொருவர் பதிவுசெய்யப்பட்ட அற்றோணி ஒருவர்மூலம் தோன்றுகின்றவிடத்து, 27 ஆம் பிரிவின் கீழ் அவ்வற்றோணியின் நியமனத்தில் அடங்கியுள்ள அவரது முகவரி, செல்லிடத் தொலைபேசி இலக்கம் மற்றும் இலத்திரனியல் அஞ்சல் முகவரி என்பன அந்நியமனம் வலுவிலுள்ளவரை அத்தகைய அற்றோணியின் பதிவுசெய்யப்பட்ட முகவரியாகவும், பதிவு செய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கமாகவும் மற்றும் பதிவுசெய்யப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் முகவரியாகவும் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எவரேனும் திறத்தவருக்குச் சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தல் அல்லது வேறு சட்ட ஆவணம்-

(i) அத்தகைய திறத்தவரின் பதிவுசெய்யப்பட்ட முகவரியின் மீது, பதிவுசெய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கத்தின்மீது அல்லது பதிவு செய்யப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் முகவரியின்மீது அத்தகைய திறத்தவருக்கு; அல்லது

(ii) திறத்தவரொருவர் பதிவுசெய்யப்பட்ட அற்றோணி யொருவர்மூலம் தோன்றுகின்றவிடத்தும் அத்தகைய நியமனம் வலுவில் இருக்கின்றவிடத்தும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட அற்றோணியின் பதிவுசெய்யப்பட்ட முகவரிமீது, பதிவுசெய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கத்தின்மீது மற்றும் பதிவுசெய்யப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் முகவரியின்மீது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட அற்றோணிக்கு,

பதிவஞ்சல் மூலம் அல்லது விரைதூதர் சேவைமூலம் அல்லது இலத்திரனியல் முறைகளுக்கூடாக சேர்ப்பிக்கப்படின், அது போதுமான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பதிவாளர், அவருக்குக் கொடுத்துதவப்பட்ட பொருளளவில் 16அ என்னும் இலக்கத்தைக்கொண்ட படிவத்திலான குறிப்பறிக்கையின் பிரதியொன்றை வழக்குப் பதிவேட்டின் பாகமாகக் கோப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அதன் இன்னொரு பிரதியை தனிவேறான பேரேடு என்றவகையில் வைத்திருந்து பேணிவருதலும் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பித்தல்

59. (1) (அ) அழைப்புக்கட்டளையானது சாதாரணமாக மன்றாணை சேர்ப்பிப்பவரினால் பதிவஞ்சல்மூலம் அல்லது விரைதூதர் சேவைமூலம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வழக்காளி, அழைப்புக்கட்டளை இலத்திரனியல் அஞ்சலினூடாகவும் சேர்ப்பிக்கப்படலாமென விரும்புகின்றவிடத்து அவசியமான எல்லா ஆவணங்களும் இலத்திரனியல் வடிவத்தில் இயைபான நீதிமன்றத்துக்கு வழக்காளியினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் விடயத்தில் அழைப்புக் கட்டளை அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்துக்கு அல்லது பிரதான தொழிலிடத்துக்கு மன்றாணை சேர்ப்பிப்பவரினால், பதிவஞ்சல்மூலம், விரைதூதர் சேவைமூலம் அல்லது மின்னஞ்சல் ஏதேனுமிருப்பின் அதன் மூலம் ஒப்படைக்கப்படலாம்.

(3) எதிராளி பகிரங்க அலுவலரொருவராக இருக்கின்றவிடத்து, நீதிமன்றம் அழைப்புக் கட்டளையை எதிராளி எத்திணைக்களத்தில் தொழிலிலமர்த்தப்பட்டுள்ளாரோ அத்திணைக் களத்தின் தலைவருக்கு மன்றாணை சேர்ப்பிப்பவர் மூலம், பதிவஞ்சல்மூலம் அல்லது விரைதூதுதர் சேவைமூலம் அனுப்பலாம் என்பதுடன் அவ்வழைப்புக்கட்டளை எதிராளிக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கச் செய்விப்பது அத்தகைய திணைக்களத் தலைவரின் கடமையாதலும் வேண்டும்.

(4) எதிராளி இன்னோராளின் தொழிலிலமர்த் தப்பட்டுள்ளாரென நீதிமன்றம் முதற்றோற்றளவில் திருப்திப்படுகின்றவிடத்து, அந்நீதிமன்றம் அழைப்புக்கட்டளையை அவரின் தொழிலிடத் திலுள்ள தொழில்தருநருக்கு மன்றாணை சேர்ப்பிப்பவர்மூலம் பதிவஞ்சல்மூலம் அல்லது விரைதூதர் சேவைமூலம் அனுப்பலாம் அல்லது தொழில்தருநர் கம்பெனியொன்றாக அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக உள்ளவிடத்து, அக்கம்பெனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயலாளருக்கு, முகாமையாளருக்கு அல்லது அதுபோன்ற வேறு அலுவலருக்கு அனுப்பலாம் என்பதுடன் அழைப்புக் கட்டளையை எதிராளிக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கச் செய்விப்பது விடயத்துக்கேற்ப, அத்தகைய தொழில்தருநரின் அல்லது அலுவலரின் கடமையாதலும் வேண்டும்.

(5) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட முறையில் எதிராளியொருவருக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்படுவதன்மேல் அவ்வெதிராளி நேரடியாக நீதிமன்றத்தில் தோன்றுகின்றவிடத்து, அவர் தேசிய அடையாள அட்டையை அல்லது கடவுச்சீட்டை அல்லது நீதிமன்றம் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான வேறு ஏதேனும் அடையாளப் படுத்துகை முறையைக் காண்பித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவில் -

"திணைக்களத் தலைவர்" என்பது —

(அ) இலங்கைத் தரைப்படை, கடற்படை அல்லது வான்படையின் ஏதேனும் அலகின் உறுப்பினரொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது அவ்வலகின் ஏவும் அலுவலர் எனப் பொருள்படும்;

(ஆ) உள்ளூரதிகார சபையொன்றில் தொழிலிலமர்த்தப்பட்ட ஆளொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, உள்ளூரதிகாரசபை மாநகரசபையொன்றாக இருக்குமிடத்து, அம்மாநகர சபையின் மாநகர ஆணையாளர் எனப் பொருள்படும் என்பதுடன் உள்ளூரதிகார சபை நகர சபையொன்றாக அல்லது பிரதேச சபையொன்றாக இருக்குமிடத்து, அந்நகர சபையின் அல்லது அப்பிரதேச சபையின் தவிசாளர் அல்லது செயலாளர் எனவும் பொருள்படும்;

(இ) வேறு எவரேனும் பகிரங்க அலுவலர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது அத்தகைய ஆள் எந்த அரசாங்கத் திணைக்

களத்தில் தொழிலிலமர்த்தப் பட்டுள்ளாரோ அந்த அரசாங் கத் திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்; அத்து டன்

“தேசிய அடையாள அட்டை” என்பது, 1968 ஆம் ஆணடின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின்கீழ் அத்த கைய ஆளுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை எனப் பொருள்படும்.”.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்த்தின் 60 ஆம் பிரிவை மாற்றிடு செய்தல்

“மன்றாணை சேர்ப்பிப் பவரினாலான சேர்ப்பித்தல் 60. (1)(அ) அழைப்புக்கட்டளையானது மன்றாணை சேர்ப்பிப்பவரினால் சேர்க்கப் படுமிடத்து, அவ்வழைப்புக்கட்டளை முதலாம் அட்டவணையின படிவ இல. 17 இலுள்ள பணிப்பாணையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) (i) மன்றாணை சேர்ப்பிப்பவர், அழைப்புக் கட்டளை எதிராளிக்குச் சேர்ப்பிக்கப்பட்டதன்மேல், அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டமைக்கான ஒப்புதல் என்றவகையில் பணிப்பாணைமீது அத்தகைய எதிராளியின் கையொப்பத்தை அல்லது பெருவிரலடையாளத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) மன்றாணை சேர்ப்பிப்பவர், ஆளின் அடையாளம், திகதி, நேரம் மற்றும் அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்ட இடம் என்பன

தொடர்பிலான விபரங்களை உள்ளடக்குகின்றதும் அழைப்புக்கட்டளை எம்முறையில் எதிராளிக்குச் சேர்ப்பிக்கப்பட்டதோ அம்முறையை எடுத்துக் கூறுகின்றதுமான அறிக்கையொன்றுடன் சேர்த்து நீதிமன்றத்துக்கு பணிப்பாணையை மீள ஒப்படைத்தல் வேண்டும். அறிக்கையானது, அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டமைக்கான ஒப்புதல் என்றவகையில் பணிப்பாணையின்மீது எதிராளி அவரது கையொப்பத்தை அல்லது பெருவிரலடையாளத்தை இட்டாரா அல்லது இடுவதற்கு மறுத்தாரா என்பது பற்றியும் கூறுதல் வேண்டும்.

(iii) பணிப்பாணையின்மீது, விடயத்துக்கேற்ப, கையொப்பத்தை அல்லது பெருவிரலடையாளத்தை இடுவதற்கு எவரேனும் எதிராளி மறுத்தலானது அழைப்புக்கட்டளை சேர்ப்பித்தலின் செல்லுபடியற்றதன்மையொன்றாகக் கருதப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட சேர்ப்பிப்பு போதிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்துப் பயனுறச் செய்யமுடியாமற்போனால், நீதிமன்றம், வழக்காளியின் அறிவுக்கெட்டியவரை தலைப்பிற் கூறப்பட்ட முகவரியில் எதிராளி வதிகின்றார் என்றும் இலங்கைக்கு வெளியே அவர் வதியவில்லை என்றும் குறிப்பிட்டு வழக்காளியிடமிருந்தான சத்தியக் கடதாசியொன்றைப் பெற்றுக்கொண்டு, எதிராளி சாதாரணமாக எவ்வீட்டில் வதிகின்றாரோ அவ்வீட்டின் துலாம்பரமான ஏதேனும் பகுதியில் அழைப்புக்கட்டளையை ஒட்டும்படி அல்லது கம்பெனியொன்றின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட

குழுவொன்றின் விடயத்தில், அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது வழமையான தொழிலிடத்தில் அல்லது அலுவலகத்தில் ஒட்டும்படி மன்றாணை சேர்ப்பிப்பவருக்குக் கட்டளையிடலாம் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் அழைப்புக்கட்டளை எதிராளியிடம் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டதெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) நீதிமன்றமானது, அந்நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டவாறு நீதிமன்றத்தின் இடப்பிரதேச எல்லைகளுக்கு வெளியே அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்கும்படி மன்றாணை சேர்ப்பிப்பவருக்கு அதிகாரமளிக்கலாம்.

(4) வழக்காளியினால் கொடுக்கப்பட்ட கடைசியாக அறியப்பட்ட முகவரியில் எதிராளியின் மீது நேரடியாக மன்றாணையைச் சேர்ப்பிக்க முடியவில்லையென மன்றாணை சேர்ப்பிப்பவரினால் அறிக்கையிடப்படுமிடத்தும் மற்றும் எதிராளி எந்த இடத்தில் வதிகின்றாரென வழக்காளி அறியமுடியாதவராகவுள்ளாரென்று சத்தியக் கடுதாசியைக் கோப்பிடுவதன்மூலம் நீதிமன்றத்துக்கு வழக்காளி தெரிவிக்குமிடத்தும், நீதிமன்றம் அத்தகைய சத்தியக்கடுதாசியின் உள்ளீடுகள்பற்றித் திருப்திப்படுவதன்மீது, ஒவ்வொரு விடயத்திலும் நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறாக மும்மொழிகளிலுமான செய்தித்தாள்களில் வெளியிடுதல் என்றவகையாக அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) இவ்வத்தியாயத்தின் நோக்கத்துக்காக —

"மன்றாணை சேர்ப்பிப்பவர்" என்பது, ஒரு பிசுக்கால், பிரதிப் பிசுக்கால், நீதிமன்றத்தினால் பணிக்கப் பட்டவாறாக நீதிமன்றத்தின் இடப்பிரதேச எல்லைகளினுள் அல்லது இடப்பிரதேச எல்லைகளுக்கு வெளியே நீதிமன்றத்தின் ஆவணங்களைச் சேர்ப்பிப்பதற்கு நீதிமன்ற நீதிபதியினால் அல்லது பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் அல்லது எதிராளி எந்தப் பிரிவினுள் வதிகின்றாரோ அந்தப் பிரிவின் கிராம அலுவலர் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகின்றது:-

"சேர்ப்பிப்புக்கான எண்பிப்பு

61. அழைப்புக்கட்டளையொன்று —

(அ) பதிவஞ்சல்மூலம் அல்லது விரைதூதர் சேவைமூலம் சேர்ப்பிக்கப்படும்போது, பதிவஞ்சற் பொருள் பற்றுச்சீட்டு அல்லது விரைதூதர் சேவைமூலம் ஒப்படைத்தமைக்கான எண்பிப்பு;

(ஆ) இலத்திரனியல் அஞ்சல் மூலம் சேர்ப்பிக்கப்படும் போது, பதிவாளரினால் இலத்திரனியல் அஞ்சல் அனுப்பப்பட்டு வழக்கேட்டின் பாகமாகக் கோப்பிடப்பட்டமைக்கான எண்பிப்பு;

(இ) செய்தித்தாள்களிலான வெளியீடு மூலம் சேர்ப்பிக்கப்படும் போது, அத்தகைய வெளியீடுகளின் பிரதிகள்; அல்லது

(ஈ) வேறேதேனும் முறையில் சேர்ப் பிக்கப்படும்போது, அத்தகைய சேர்ப்பிப்புப்பற்றிய சத்தியக் கடுதாசி,

அத்தகைய அழைப்புக்கட்டளையின் சேர்ப்பிப்பினதும் அத்தகைய சேர்ப்பிப்பின் தேதியினதும் போதிய சான்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றில் ஏல்தகவு டையதாதலும் வேண்டும்; அத்துடன் அதன்கண் அடங்கியுள்ள கூற்றுக்கள், முரணாக எண்பிக்கப்பட்டாலொழியவும் எண்பிக்கப்படும்வரையும் சரியானவையெனக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகின்றது:-

"முகவருக்குச் சேர்ப்பித்தல் அல்லது அசைவற்ற ஆதனத்தின்மீது ஒட்டுதல்

66. ஓர் அசைவற்ற ஆதனம் தொடர்பில் அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட பிழைக்காக நிவாரணம் அல்லது நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கான வழக்கொன்றில், சேர்ப்பிப்பானது நேரடியாக எதிராளிக்குச் செய்யப்படமுடியாதிருப்பின், ஆதனத்துக்குப் பொறுப்பாகவுள்ள எதிராளியின் எவரேனும் முகவருக்கு அது சேர்ப்பிக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய முகவரைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கும் விடயங்களில் அழைப்புக்கட்டளை யானது அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் துலாம்பரமான பாகத்தில் ஒட்டப்படுதல் வேண்டு மென நீதிமன்றம் பணிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகின்றது:-

"மறியற் சாலையிலுள்ள எதிராளியின் மீதான சேர்ப்பிப்பு

68. (1) எதிராளி மறியற்சாலையிலிருப்பின், எதிராளி எந்த மறியற்சாலையில் அடைத்துவைக்கப் பட்டுள்ளாரோ அந்த மறியற்சாலைக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அழைப்புக் கட்டளையானது ஒப்படைக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய அலுவலர், அவ்வழைப்புக் கட்டளை எதிராளியின் மீது நேரடியாகச் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்வித்தலும் வேண் டும்; அத்துடன் எதிராளியினால் அழைப்புக்கட்டளை பெறப்பட்டமைபற்றிய ஒப்புக்கொள்ளுதலொன்றை அவர் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

(2) பணிப்பாணையானது, சேர்ப்பிப்புப்பற்றிய கூற்று அதன்மீது புறக்குறிப்பிடப்பட்டும் மறியற் சாலைக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் கையொப்பமிடப்பட்டும், அது எந்த நீதிமன்றத் திலிருந்து வழங்கப்படுகின்றதோ அந்த நீதிமன்றத் துக்குப் மன்றாணை சேர்ப்பிப்பவரினூடாக மீள வொப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3) அழைப்புக்கட்டளை மீளவொப்படைக்கப் படற்பாலதான தேதியன்று எவரேனும் எதிராளி சிறைச்சாலையில் உள்ளவிடத்து, சிறைச்சாலைக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், எதிராளியை நீதிமன்றத்தில் முன்னிறுத்துதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு, "பணித்தலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணித்தலும் வேண்டும். அத்தகைய சேர்ப்பிப்பை விரைதூதர் சேவையின்மூலம் அல்லது எதிராளி எந்த நாட்டில் வதிகின்றாரோ அத்தகைய நாட்டின் சட்டங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சட்டக் குழுமத்தின்மூலம் பயனுறுத்தமுடியுமென்பதுடன் அழைப்புக் கட்டளையின் நேரடிச் சேர்ப்பிப்புப்பற்றிய எண்பிப்பு நீதி மன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் VIII என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் VIIIஅ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அத்தியாயம் VIIIஅ என்பதை உட்புகுத்துதல்*

"அத்தியாயம் VIIIஅ

**கட்டளைகளைச் சேர்ப்பித்தல்**

*கட்டளைகளை அறிவித்தல்* 71அ. நீதிமன்றமானது, ஆவணங்களைச் சேர்ப்பிப்பதற்கு மேலதிகமாக, ஒரு கட்டளை, ஒரு தடையுத்தரவு, ஓர் இடைக்காலத் தடையுத்தரவு, ஒரு நடுக்கட்டல் கட்டளை மற்றும் ஓர் இடைக்காலக் கட்டளை உட்பட ஏதேனும் நீதிமன்றக் கட்டளையைச் சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு இலத்திரனியல் அல்லது தொலைபேசி உபாயங்கள் என்றவகையாக அறிவிக்கும்படி பதிவாளரைப் பணிக்கலாம்.".

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"(2) (அ) தவணைதவறுகைக்காக எதிராளிக்கெதிராக மறு திறத்தவரில்லா விளக்கத்துக்காக வழக்கு நிர்ணயிக்கப்பட்டபின்னர் எந்நேரத்திலும்; அல்லது

(ஆ) அவரின்மீது தீர்வை சேர்ப்பிக்கப்படாமல் தவணை தவறுகைக்காக அவருக்கெதிராகத் தீர்வை பதியப்பட்டபின்னர் எந்நேரத்திலும்; அல்லது

(இ) தவணைதவறுகைக்காக அவருக்கெதிராகப் பதியப்பட்ட தீர்வை சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள்,

எதிராளி அவர் அழைப்புக்கட்டளையைப் பெறவில்லை அல்லது அத்தகைய தவணைதவறுகைக்காக நியாயமான ஏதுக்கள்

அவருக்கிருந்தன என வழக்காளிக்கான அறிவித்தலுடன் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்து அதன்பின்னர் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துமிடத்து, நீதிமன்றம், விடயத்துக்கேற்ப, மறுதிறத்தவரில்லா விளக்கத்துக்காக வழக்கை நிர்ணயிக்கின்ற கட்டளையையும், தீர்ப்பையும், தீர்வையையும் தள்ளிவைத்தல் வேண்டுமென்பதுடன் நீதிமன்றம் தகுதியெனக் கருதவேண்டியவாறு செலவுதொகைகள்பற்றிய அல்லது வேறுவகையான நியதிகளின் மேல் தவணைதவறிய கட்டத்திலிருந்து அவரது எதிர்வாதத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்கு எதிராளிக்கு அனுமதியளித்தலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 653 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 653 ஆம் பிரிவு, “ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கான” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இரண்டு மில்லியன் ரூபாவுக்கான” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் படிவம் இல. 7ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன்மூலமும்:-

“இல.7 [பிரிவு 27]

**பதிவுசெய்யப்பட்ட அற்றோணி ஒருவரை நியமிப்பதற்கான படிவம்**

................................ என்னுமிடத்தைச்சேர்ந்த ........................... ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையைக் கொண்டுள்ள .................... .......................... ஆகிய நான் / நாம், எனது / எமது பதிவுசெய்யப்பட்ட அற்றோணியாக விருப்பதற்கும் .................................... காகவும் ............ .................... பெயரிலும் சார்பிலும் ...................... முன்னர் தோன்றுவதற்கும் அதன்கண் (வழக்கு என்னவென்பதைக்காட்டி, வியடத்துக்கேற்ப, வழக்குத் தொடுப்பதற்கும் அல்லது வழக்கை எதிர்வாதிடுவதற்கும்)

அத்துடன் சொல்லப்பட்ட வழக்கில் சொல்லப்பட்ட …… …………………….. என்பவரினால் அவருக்குச் செலுத்தப் படக்கூடிய எல்லாப் பணங்களையும் பெறுவதற்கும் எடுப்பதற்கும், ............................... தொடர்பில் சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் வைப்பிலிடப்படக்கூடிய ஏதேனும் பணத்தொகையின் அல்லது எவையேனும் பணத்தொகைகளின் கொடுப்பனவுக்காக அதிலிருந்தான ஏதேனும் கட்டளைக்காக அல்லது எவையேனும் கட்டளைகளுக்காகப் பிரேரிப்பதற்கும் அவரது பெயரில் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும், அவற்றுக்கு அவசியமான எல்லாப் பற்றுச்சீட்டுக்களையும், விடுவிப்புக்களையும், பொறுப்பு விடுவிப்புக்களையும் கொடுப்பதற்கும் அத்துடன் தேவையேற்படின், வழக்கை நடுத்தீர்ப்பாளர்களின் அளிப்புக்கும் முடிபுக்கும் ஆற்றுப்படுத்துவதற்கும் ……………………………… க்காக ஒரு நடுத்தீர்ப்பாளரைப் பெயர் குறிப்பதற்கும், அந்நோக்கத்துக்காக ஏதேனும் பிரேரணையை, சமர்ப்பணத்தை அல்லது முறியைக் கையொப்பமிடுவதற்கும்; அல்லது அவசியமாயின் …….. ………………………. என்ற சொல்லப்பட்ட சட்டத்தரணிக்குத் தகுதியும் தகுந்ததுமெனத் தோன்றவேண்டியவாறு ………. .................... க்கெதிராக அத்துடன் மேன்முறையீடுசெய்வதற்குச் சொல்லப்பட்ட ............................... நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு, கட்டளை, தண்டனைத்தீர்ப்பு, அல்லது இடைக்கால அல்லது இறுதித் தீர்வைக்கெதிராக மேல்நீதிமன்றத்துக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான ஒரு தீர்ப்புப் பதியப்படுவதற்கு அனுமதியளிப்ப தற்கும் சம்மதமளிப்பதற்கும்; அத்துடன் ..................... க்காகவும் …………………இன் பெயரிலும் அத்தகைய மேன்முறையீட்டின் குற்றவழக்குக்கான வழக்குநடவடிக்கைகளின்போது அவசியமான எத்தகையதுமான ஒவ்வொரு முறியையும் அல்லது பிணைமுறியையும் …………………………. என்ற முறையில் செயலாற்றுவதில், கையொப்பமிடுவதற்கும், அத்துடன் சொல்லப்பட்ட ............................... நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பின்மேல் அல்லது கட்டளையின்மேல் சொல்லப்பட்ட ............................... என்பவருக்கெதிராகவும் அவரது ஆதனத்துக்கெதிராகவும் நிறைவேற்றுவதற்கு முற்படுவதற்கும் சட்டத்தரணி ............................... அவர்களைப் பெயர்குறித்து நியமித்துள்ளேன் / பெயர்குறித்து நியமித்துள்ளோம், அமைத்துருவாக்கியுள்ளேன் /அமைத்துருவாக்கியுள்ளோம் மற்றும் நியமித்துள்ளேன் / நியமித்துள்ளோம் என்பதுடன் இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றேன் /பெயர்குறித்து நியமிக்கின்றோம், அமைத்துரு வாக்குகின்றேன் /அமைத்துருவாக்குகின்றோம் மற்றும் நியமிக்கின்றேன் / நியமிக்கின்றோம் என்று இத்தால் சகலரும் அறிவீராக

அத்துடன் ................................................, சொல்லப்பட்ட .............................. ஆகிய சட்டத்தரணிக்கு, .................... .................... நேரடியாகச் சமுகமளித்திருப்பின் சட்டமுறையாகச் செய்யக்கூடிய அல்லது செய்யமுடியுமான சூழ்நிலைகளில் அல்லது சூழ்நிலைகள்தொடர்பில் அவசியமாகக்கூடிய சட்டமுறையான எல்லா வழிவகைகளையும் எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும், அவசியமாயின் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட அற்றோணியை அல்லது சட்டத்தரணிகளை அல்லது வழக்குரைஞரை நியமிப்பதற்கும், மீண்டும் விருப்பத்தின்பேரில் அத்தகைய நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் மேலும் அதிகாரமளித்து வலுவளிக்கின்றேன் /வலு வளிக்கின்றோம் என்பதுடன், எல்லா வகையினவையுமான ஒழுங்கீனங்களை விடுவிப்பதற்கும், சொல்லப்பட்ட சட்டத்தரணி அல்லது அவரது பதிலாள் அல்லது பதிலாட்கள் அல்லது சொல்லப்பட்ட வழக்குரைஞர் இதன்கண் செய்யவேண்டிய எல்லாவற்றையும் எதனையும் ஏற்புறுதி செய்வதற்கும், உறுதிப்படுத்துவதற்கும், அனுமதிப்பதற்கும் ........................................... மேலும் வாக்குறுதியளித்து உடன்படுகின்றேன் /உடன்படுகின்றோம்.

..........................................
கையொப்பம் /கையொப்பங்கள்

20 ............................... ஆம் ஆண்டு .......................... மாதம் ............................... ஆந்நாளாகிய இன்று ...................... .................... இல் ............................... இன் கைப்படச் சாட்சிப்படுத்தப்படுகின்றது

................................ ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/சிரேட்ட பிரசைகளுக்கான அடையாள அட்டை /சாரதி உரிமம் என்பவற்றின்படி சொல்லப்பட்ட .................... .................. இன் (பெயர் /பெயர்கள்) ஆளடையாளம்பற்றி நான் திருப்திப்படுகின்றேன் என்றும் அவர் /அவள் /அவர்கள் ............... ஆந்தேதியன்று என்முன்னர் கையொப்பமிட்டார் / கையொப்பமிட்டனர் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்

...............................................
பதிவுசெய்யப்பட்ட அற்றோணியின் /
சட்டத்தரணியின்/மன்றாடியாரின் /
நொத்தாரிசுவின் /தூதுவரின் /
உயர் ஸ்தானிகரின் /இராசதந்திர
அலுவலரின் /காவற்றுறை
அலுவலரின் கையொப்பம்
(இலச்சினை)

s



....................................................

பதிவுசெய்யப்பட்ட அற்றோணியின் கையொப்பம்
(இலச்சினை)

முகவரி:
தொலைபேசி இலக்கங்கள் : அலுவலகம்:
செல்லிடத் தொலைபேசி இலக்கம்:
மின்னஞ்சல் முகவரி:
தொலைநகல் இலக்கம்:";

(2) அதன் படிவ இல. 16அ வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன்மூலமும்:-

"இல.16அ [பிரிவுகள் 27 மற்றும் 55]

**பதிவுசெய்யப்பட்ட முகவரி / பதிவுசெய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கம் / பதிவுசெய்யப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் முகவரி என்பன பற்றிய குறிப்பறிக்கை**

................................ இன் வர்த்தக மேல்நீதிமன்றத்தில் / மாவட்ட நீதிமன்றத்தில் / ஆரம்ப நீதிமன்றத்தில்.
வழக்கில.

(வழக்காளி /எதிராளி /மனுதாரர் /பிரதிவாதி /சேர்க்கப்படுவதற்கு/ பதலீடுசெய்யப்படுவதற்கு நாடுகின்ற திறத்தவர்) ஆன ....... .........................ஆகிய நான், இக்கோவையின்கீழ் எனக்குச் சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல்களையும் வேறெல்லாச் சட்ட ஆவணங்களையம் சேர்ப்பிப்பதற்காக எனது முகவரி / செல்லிடத் தொலைபேசி இலக்கம் / இலத்திரனியல் அஞ்சல் முகவரி என்பவற்றை இத்தால் கொடுத்துதவுகின்றேன்.

அதே படிவத்தில் வேறொரு குறிப்பறிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் பதிவுசெய்யப்பட்ட முகவரி /பதிவுசெய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கம் / பதிவுசெய்யப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் முகவரி என்பவற்றிலான ஏதேனும் மாற்றத்தைப் பதிவாளருக்கு உடனடியாகத் தெரிவிப்பதற்கு நான் பொறுப்பேற்கின்றேன்.

முகவரி:
செல்லிடத் தொலைபேசி இலக்கம்:
இலத்திரனியல் அஞ்சல் முகவரி:
தொலைநகல் இலக்கம்:

...................................................
கையொப்பம்
வழக்காளி / எதிராளி / மனுதாரர் /
பிரதிவாதி /சேர்க்கப்படுவதற்கு /
பதிலீடுசெய்யப்படுவதற்கு
நாடுகின்ற திறத்தவர்.";

(3) அதன் படிவ இல. 17ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன்மூலமும்:-

"இல.17 [பிரிவுகள் 60, 71அ]

அழைப்புக்கட்டளைகளை அல்லது கட்டளைகளைச் சேர்ப்பிப்ப தற்குப் பணிப்பாணை சேர்ப்பிப்பவருக்கான பணிப்பாணையின் படிவம் ............... நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு / அதிகார மளிக்கப்பட்ட அலுவலருக்கு / .................... பிரிவின் கிராம அலுவலருக்கு.

இருபிரதிகளில் உமக்கு இத்தால் அனுப்பப்படுகின்ற மேலே பெயரிடப்பட்ட வழக்கிலான அழைப்புக்கட்டளைகளை, அவை எவ்வாட்களுக்கு நெறிப்படுத்தப்பட்டுள்ளனவோ அவ்வாட்களுள் ஒவ்வொருவருக்கும் உடனடியாகச் சேர்ப்பிக்கவும்; அத்துடன் அழைப்புக்கட்டளையின் ஓர் இணைப்பிரதியையும், அழைப்புக் கட்டளையுடன் சேர்த்தனுப்பப்படும் பிராதின் பிரதிகளுள் ஒன்றையும் (அல்லது பிராதுடன் முன்வைக்கப்பட்ட சுருக்கக் கூற்றுக்களையும்) அத்தகைய ஒவ்வோராளிடமும் விட்டுவைக்கவும் அல்லது அவருக்கு அளிக்கவும். அத்துடன் உமது சான்றிதழுடன் இணைக்கப்பட்ட அழைப்புக்கட்டளையை ஒரு காண்பிபொருளாக மீளவொப்படைத்து, இப்பணிப்பாணையை நீர் எம்முறையில் நிறைவேற்றியுள்ளீரென்பதை 20....... ஆம் ஆண்டு ....... மாதம் ........ ஆந்நாளன்று அல்லது அதற்குமுன்னர் இந்நீதிமன்றத் துக்குச் சான்றுப்படுத்தவும்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
(கையொப்பமிடப்பட்டது) ....................
பதிவாளர்.

20.......... ஆம் ஆண்டு ............ மாதம் ................ ஆந்நாள்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*